**கோவில்பட்டி நகராட்சி**

**சாதாரணக் கூட்டம்**

**நிகழும் விகாரி வருடம் ஆவணி திங்கள் 15, நாள்: 31.08.2020ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை:- திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,**

**கோவில்பட்டி நகராட்சி** **தனி அலுவலர்,**

**நாள்: 28.08.2020** **கோவில்பட்டி நகராட்சி**

| மன்ற கூட்ட தேதி | வரசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் எண்: 1**<br><br>கோவில்பட்டி நகராட்சி புதுரோட்டு தெருவிலுள்ள அலுவலக கட்டிடமானது கட்டப்பட்டு சுமார் 75 வருடத்திற்கு மேலாகிவிட்டபடியால், மற்றும் பார்க் கிழக்கு ரோட்டில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு கடந்த ஜீன் 2019 முதல் மேற்படி புதிய கட்டிடத்தில் நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே ஏற்கனவே நகராட்சி அலுவலக கட்டிடம் இயங்கி வந்த மேற்படி பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தை அகற்றிவிட்டு, நகராட்சிக்கு வருவாய் வரத்தக்க வகையில் புதிதாக வங்கி மற்றும் அறைகளுடன் கூடிய கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கட்டுவதற்கு, தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இயக்குநரக அலுவலகத்தில், கட்டிட வடிவமைப்பு வரைபட அனுமதி (Type Design Approval) பெறப்பட வேண்டும். மேற்படி கட்டிட அனுமதி பெறுவதற்காக மாதிரி வரைபடம் மற்றும் வடிவமைப்பு வரைபடம் தயார் செய்யும் பொருட்டு தனி கலந்தாலோசகர் (பதிவு பெற்ற பொறியாளர்)-ஐ நியமனம் செய்யவும், அரசு பொறியியல் கல்லூரியில் மண் மாதிரி பரிசோதனை சான்று பெற்றுக்கொள்ளவும் மற்றும் கட்டிட ஸ்திரத்தன்மை சான்று பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களது உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த பொறியாளரிடம் சான்று பெற்றுக் கொள்ளவும், சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவண நகல், சொத்து உரிமம் தொடர்பான வில்லங்கச் சான்று பெற்றுக்கொள்ளும் வகைக்கும் அதற்கான செலவுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3897/2020/எப்1) | தீர்மானம் எண்.4107 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

**பொருள் எண்: 2**

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் 15.08.2020 சனிக்கிழமை அன்று நடைபெற உள்ள 74வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு நிகழ்ச்சிக்கு தேவையான இனிப்பு, காரம், தேநீர் சாமியானா பந்தல், இருக்கை வசதிகள், பரிசு பொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட ஏற்பாடுகளை செய்வதற்கு விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | அப்பா கேட்ரஸ் & கேட்டரிங் சர்வீஸ்<br>23F, A.V. ஸ்கூல் காம்ப்ளக்ஸ்,<br>கதிரேசன்கோவில்ரோடு,<br>கோவில்பட்டி. | 24,500 |
| 2. | A.S. திவ்யா<br>சாமியானா பந்தல் அமைப்பகம்<br>டெக்கரேசன், சவுண்ட்<br>சர்வீஸ்&லைட்டிங்ஸ்<br>பத்மா மருத்துவமனண அருகில்,<br>மெயின்ரோடு, கோவில்பட்டி. | 24,800 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த அப்பா கேட்ரஸ் & கேட்டரிங் சர்வீஸ் விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3428/2020/எச்1

தீர்மானம் எண்.4108 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்: 3**

இந்நகராட்சி வார்டு எண்.8, புதுக்கிராமத்தில் உள்ள தகன மேடை பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து அகற்றிவிட்டு புதிய தகன மேடை அமைக்கும் பணிக்கு ரூ-9.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2020ல் மன்ற எண்: 4093 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 21.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1)திரு.வி. தங்கப்பாண்டியன் | .. | மதிப்பீட்டை விட (--) 0.00 % குறைவு |
| 2)திரு.எச்.முகமதுஇப்ராஹிம் | .. | மதிப்பீட்டை விட (+) 0.01 % அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.00% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.தங்கப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.4109 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3367/2020/இ1) | |
| | <u>பொருள் எண்: 4</u><br>கோவில்பட்டி நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஓராண்டுக்கு முன்னர் முடிக்கப்பட்ட பணிகளை முதல் கட்டமாக நகராட்சி வசம் ஒப்படைத்து நகராட்சி மூலம் பராமரித்து கொள்ளுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்பொறியாளர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் 10 தற்காலிக பணியாளர்கள் மூலம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. தற்காலிக பணியாளர்கள் சப்ளை செய்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் செப்டம்பர் 2020ஆம் மாதத்துடன் முடிவடைவதால் மீண்டும் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் தினமும் 10 பணியாளர்களை கொண்டு முடிவுற்ற திட்டப்பணிகளை இயக்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.21.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3812/2020/இ1) | தீர்மானம் எண்.4110 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 5</u><br>சிதம்பராபுரத்தில் செயல்பட்டு வரும் நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் கொட்டப்படும் குப்பைகளால் குப்பை கொட்டும் இடம் அடிக்கடி நிரம்பிவிடுகின்றபடியால், மழைக்காலங்களில் வாகனங்களால் உள்ளே சென்று குப்பைகள் கொட்ட இயலவில்லை. எனவே மழைக்காலங்களில் குப்பைகள் கொட்டுவதற்கு வசதி இல்லாத காரணத்தினால் ரோடுகளிலே கொட்டும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அதனை போக்கும் விதமாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை ஒரு சாய்வுதளம் போல் ஏற்படுத்தி அதன் மேல் வாகனங்கள் சென்று கொட்டுவதற்கு வழிவகை செய்வதற்காக வேளாண்மை பொறியியல் பிரிவிலிருந்து பொக்லைன் (JCP) இயந்திரம் வாடகைக்கு பெற்று சுமார் 50 மணி நேரம் பணி முடித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3636/2020/எச்1 | தீர்மானம் எண்.4111 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

**பொருள் எண்: 6**

இந்நகராட்சி வார்டு எண்.13ல் உள்ள முகமது சாலியாபுரம் 3வது தெருவிலுள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.0.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2020 ல் மன்ற எண்:4099 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) திருமதி. நூர்ஜஹான் | .. | மதிப்பீட்டை விட (--) 0.001 % குறைவு |
| 2) திரு.எச்.முகமதுஇப்ராஹிம் | .. | மதிப்பீட்டை விட (+) 0.09 % அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.001% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திருமதி.நூர்ஜஹான் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3367/2020/இ1)

தீர்மானம் எண்.4112 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

**பொருள் எண்: 7**

இந்நகராட்சி வார்டு எண்.3ல் உள்ள நடராஜபுரம் மேற்கு 8வது தெருவிலுள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.0.66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2020ல் மன்ற எண்:4098 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1)திரு. வி. தங்கப்பாண்டியன் | .. | மதிப்பீட்டை விட (--) 0.01 % குறைவு |
| 2)திரு.எச்.முகமதுஇப்ராஹிம் | .. | மதிப்பீட்டை விட (+) 0.49 % அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.01% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு. வி. தங்கப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3367/2020/இ1)

தீர்மானம் எண்.4113 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

பொருள் எண்: 8

இந்நகராட்சி வார்டு எண்.13ல் உள்ள முகமதுசாலியாபுரம் இரண்டாவது தெருவிலுள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.0.72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2020 ல் மன்ற எண்: 4097 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) திருமதி.நூர்ஜஹான் | .. | மதிப்பீட்டை விட (--) 0.001 % குறைவு |
| 2) திரு.எச்.முகமதுஇப்ராஹிம் | .. | மதிப்பீட்டை விட (+) 0.09 % அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.001% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திருமதி.நூர்ஜஹான் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3367/2020/இ1)

தீர்மானம் எண்.4114

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.